# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 70 ஆம் இலக்க, கிராமிய வேலை யாட்கள் மற்றும் ஒன்றிணைந்த கிராமிய வளங்கள் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, நவெம்பர் மாதம் 27 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2009 ஆம் ஆண்டின் 70 ஆம் இலக்க, கிராமிய வேலை யாட்கள் மற்றும் ஒன்றிணைந்த கிராமிய வளங்கள் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[*2009 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ-ஓ. (கூட்.) 13/2008*

### கிராமிய வேலையாட்கள் மற்றும் ஒன்றிணைந்த கிராமிய வளங்கள் அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

*முன்னுரை.*

"கிராமிய வேலையாட்கள் மற்றும் ஒன்றிணைந்த கிராமிய வளங்கள் அபிவிருத்தி மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்காக, இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட மன்றம் எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ் விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காக இருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1**. இச்சட்டம், 2009 ஆம் ஆண்டின் 70 ஆம் இலக்க, கிராமிய வேலையாட்கள் மற்றும் ஒன்றிணைந்த கிராமிய வளங்கள் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*கிராமிய வேலையாட்கள் மற்றும் ஒன்றிணைந்த கிராமிய வளங்கள் அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைத்தல்.*

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "கிராமிய வேலையாட்கள் மற்றும் ஒன்றிணைந்த கிராமிய வளங்கள் அபிவிருத்தி மன்றத்தின்" தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் உருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தில் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகைய எண்ணிக்கையினரான அத்தனை

ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "கிராமிய வேலையாட்கள் மற்றும் ஒன்றிணைந்த கிராமிய வளங்கள் அபிவிருத்தி மன்றம்" என்ற பெயர்மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டி ணைக்கப்பட்ட குழுவாகவாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் அது அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பி யாங்கு அதை மாற்றவும் அதற்கு முழுத்தத்துவமும் அதிகாரமும் இருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

*3. (1)* கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) கிராமிய சமுதாயங்களுக்கிடையே வறுமையை ஒழிப்பதற்கும் மற்றும் அவர்களது பொருளாதார, சமூக, கலாசார குறைபாடுகளைத் தீர்த்துவைப்ப தற்குமான செயற்பாடுகளை ஊக்குவித்தல் ;

(ஆ) சாதி, குல, மத மற்றும் இன வேறுபாடுகளின்றி கிராமிய மற்றும் பெருந்தோட்டச் சமுதாயங்களிடையே நட்புறவையும், சமாதானத்தையும், ஒற்றுமையையும் உருவாக்குதல் ;

(இ) கிராமிய மற்றும் பெருந்தோட்ட சமுதாயங்களிடையே கல்வி, சுய தொழில், தொழிற்பயிற்சி, சிறுதொழில் முயற்சிகள் மற்றும் ஏனைய அனைத்து நிலைபேறான செயற்பாடுகளின் ஊடாக சமூக, பொருளாதார நிலைமைகளை அபிவிருத்தி செய்தல் ;

(ஈ) கமத்தொழில், தோட்ட வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கிராமியக் கைத்தொழில் மற்றும் குடிசைக் கைத்தொழில் ஆகியவற்றுக்கான கருத்திட்டங்களைத் தாபித்தல், பேணிவருதல் மற்றும் மேம்படுத்துதல் அத்துடன் அத்தகைய கைத்தொழில்களுக்கு சந்தை வாய்ப்புக்களைக் கண்டறிதல் ;

(உ) குறைந்த வருமானம் பெறுவோரின் சமூக பின்னடைவைக் குறைக்கும் பொருட்டு ஜக்கியம் மற்றும் பரஸ்பர புரிந்துணர்வின் ஊடாக கிராமிய வேலையாட்களின் சமூக அந்தஸ்தை அபிவிருத்தி செய்தல்;

(ஊ) கூட்டுமொத்தமான அபிவிருத்தி மற்றும் ஆண், பெண் சமத்துவத்தின் பொருட்டு பெண்களை ஒன்றிணைப்பதற்காக அவர்கள் சார்பில் விசேட வேலைத் திட்டங்களை ஊக்குவித்துதல் ;

(எ) கிராமிய மற்றும் பெருந்தோட்டத்துறைகளுக்கு நிதி உதவிகளை வழங்குதல், வங்கிக் கடன்களை ஏற்பாடு செய்து கொடுத்தல் மற்றும் அரச மானியங்களைப் பெற்றுக் கொடுத்தல் ;

(ஏ) கிராமிய மற்றும் பெருந்தோட்டத்துறைகளில் திறமைகளை அபிவிருத்திசெய்யும் பொருட்டு கருத்தரங்குகள், செயலமர்வுகள், கல்விச் சுற்றுலாக்கள், விரிவுரைகள் மற்றும் கலந்துரையாடல்களை ஒழுங்கு செய்தல், புலமைப் பரிசில்களையும் உதவிப்பணங்களையும் வழங்குதல், விளையாட்டு மற்றும் கலாசார செயற்பாடுகளை ஒழுங்குசெய்தல் ;

(ஐ) கிராமிய மற்றும் பெருந்தோட்டத்துறைகளிலுள்ள சிறுவர்களது உள, உடல் வளர்ச்சியை அபிவிருத்தி செய்வதற்கென முன்னிலைப் பாடசாலைகள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், சன சமூக நிலையங்கள் ஆகியவற்றைத் தாபித்தல் ;

(ஒ) நடமாடும் மருத்துவ சிகிச்சை நிலையங்களை நடத்துவதன் மூலம் கிராமிய மற்றும் பெருந்தோட்டத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு மருத்துவ வசதிகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகளை வழங்குதல் ; அத்துடன்

(ஓ) மன்றத்தின் குறிக்கோள்களை அபிவிருத்தி செய்யும் பொருட்டு துண்டுப் பிரசுரங்கள், செய்தித்தாள்கள், சஞ்சிகைகள் மற்றும் புத்தகங்களை அச்சிடுதல், வெளியிடுதல் மற்றும் விநியோகித்தல் ;

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதில் இனம், சாதி, சமயம், மொழி, பால் அல்லது அரசியல் கருத்து என்ற அடிப்படைகளில் அமைந்த வேறுபாடுகள் இன்றி அத்தகைய நடைமுறைப்படுத்தலானது நிறைவேற்றப்படுதலைக் கூட்டுத்தாபனமானது உறுதிப்படுத்துதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை 6 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைவாக 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க தெரிவு செய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட தவிசாளரையும், துணைத்தவிசாளரையும் ஏனைய அத்தகைய பதவி தாங்குநர்களையும் கொண்ட ஆளுநர் சபையால் (இதனகத்துப் பின்னர் “சபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

(2) முதலாவது சபை இச்சட்டம் தொடங்கும் நாளுக்கு நேர் முந்திய நாளன்று பதவி வகிக்கும் மன்றத்தின் ஆளுநர் சபையின் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.*

**5.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாகக் கூட்டுத்தாபனமானது, பின்வருவனவற்றிற்கான தத்துவம் உட்பட கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையும் ஊக்குவிப்பதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமாகின்றவாறான அல்லது உசிதமாகக் கூடியவாறான எத்தன்மையதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் விடயங்களையும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்குமான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுக்கவும் அல்லது கொடுக்கவும், ஈடுவைக்கவும், அடைமானம் வைக்கவும், விற்பனை செய்யவும், கொடுத்து மாற்றவும் அல்லது வேறுவகையில் பராதீனப்படுத்தவும், பாரபந்தப்படுத்தவும் அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவும் ;

(ஆ) நேரடியாகவாயினுஞ்சரி அல்லது அதன் பொருட்டு கூட்டுத்தாபனத்தால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவர் ஊடாகவாயினுஞ்சரி, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அல்லது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் செய்து கொள்வதற்கும், புரிவதற்கும் அல்லது நிறைவேற்றுவதற்கும் ;

(இ) நன்கொடைகளையும் கொடைகளையும் விருப்பாவணக் கையளிப்புகளையும், காசாகவாயினுஞ்சரி அல்லது பொருளாகவாயினுஞ்சரி, ஏற்றுக்கொள்வதற்கு ;

(ஈ) நிதிகளை முதலீடு செய்வதற்கும் ஏதேனும் வங்கியில் நடைமுறை, வைப்பீட்டு மற்றும் சேமிப்புக் கணக்குகளைப் பேணுவதற்கும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனம் பொருத்தமானதெனக் கருதும் அத்தகைய முறையிலும் அத்தகைய பிணைப்பொறுப்பின்மீதும் பணத்தைக் கடனெடுப்பதற்கு அல்லது முதலீடு செய்வதற்கு; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமனம் செய்வதற்கும், தொழிலுக்கமர்த்துவதற்கும், இடமாற்றம் செய்வதற்கும், அவர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கும் அத்துடன் அவர்களை பதவி நீக்கம் செய்வதற்கும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. *(1)* ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப்பெரும்பான்மை கொண்டு, பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது எவற்றுக்கும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :$

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல் அத்துடன் உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்கள் பதவி விலகல் அல்லது அவர்களை விலக்குதல் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தெரிவு செய்தல், அவர்கள் பதவி துறத்தல், பதவியை வறிதாக்கல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் அவர்களின் தத்துவங்களும் கடமைகளும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களைத் தெரிவு செய்தலும் அதன் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும்;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்;

(உ) கூட்டுத்தாபனத்தின் கூட்டங்களில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடவடிக்கை முறைகள், கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும், அத்தகைய கூட்டங்களின் நேரங்களும், இடங்களும், அறிவித்தல்களும், நிகழ்ச்சி நிரலும், அதற்கான கூட்ட நடப்பெண்ணும் மற்றும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமைசெய்தலும் மற்றும் அதன் நிதிகளின் கட்டுக் காப்பும்.

(2) கூட்டுத்தாபனத்தின் விதி எதுவும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்று என்றாற்போன்று அதேபோன்ற கூட்டத்திலும் அதே போன்ற முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**7**.(1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அன்பளிப்பு, மரணசாதனக் கையளிப்பு, அறுதிமாற்றம், நன்கொடை, ஒப்பப்பணம், உதவு தொகை, கட்டணங்கள் அல்லது மானியங்கள் என்ற வகையில் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் சபை தீர்மானிக்கும் ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத் தாபனத்தின் வரவில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்படும் எல்லாச் செலவினங்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்.*

**8**. (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, கூட்டுத்தாபனத்தின் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் சபையினால் நியமிக்கப் பட்ட ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

(4) இப்பிரிவில், “தகைமைபெற்ற கணக்காய்வாளர்” என்பது,-

(i) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப் பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவ ராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றைக் கொண்டவராகவு முள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்

தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

எனப் பொருளாகும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**9**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் என்பதுடன் சபையின் வலுவளிப்புடனும் குறைந்தபட்சம் சபையின் இரண்டு ஆயுள் உறுப்பினர்களின் முன்னிலையிலும் தவிர எத்தன்மையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. இவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அத்தகைய சாதனத்தில் தங்கள் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதலானது ஆளெவரும் சாட்சியொருவராக கையொப்பமிடுவதினின்று தனிவேறானதாதல் வேண்டும். இலச்சினை சபையால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படுதல் வேண்டும்.

*மன்றத்தினால் செலுத்தப்படற்பாலனவையும் மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலவையுமான தனிசுகள்.*

**10**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய நாளன்றுள்ள மன்றத்தின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் ஒப்பப்பணங்களும், உதவு தொகைகளும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*உறுப்பினர்களின் பொறுப்பின் வரையறை.*

**11**. கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் எவரும் கூட்டுத்தாபனத்தின் தனிசுகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் நோக்கத்திற்கு அல்லது வேறு ஏதேனும் நோக்கத்திற்கு உறுப்பாண்மைக் கட்டணமாக அத்தகைய உறுப்பினரிடமிருந்து வருமதியான தொகையை விஞ்சிய உதவுதொகை எதனையும் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

**12.** கூட்டுத்தாபனத்தின் பணங்களும் ஆதனமும் அவை எவ்வாறு பெறப்பட்டிருப்பினும்சரி, இதன்கண் தரப்பட்டுள்ள குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு மட்டுமே பயன்படுத்தப் படுதல் வேண்டுமென்பதுடன், அதன் பகுதி எதுவும் பங்கிலாபம் அல்லது இலாபங்கள் என்ற வகையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதலோ, மாற்றப்படுதலோ ஆகாது.

*கூட்டுத்தாபனத்தின் பணங்களையும் ஆதனத்தையும் பிரயோகித்தல்.*

**13.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக கூட்டுத்தாபனம் ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, மரணசாதனக் கையளிப்பு என்பதன் பயனைக்கொண்டு அல்லது வேறு வகையில் அதற்குரித்தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் எடுக்கவும் வைத்திருக்கவும் சட்டத்தில் இயலுமானதாதலும் ஆற்றல் உடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைவாக அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்கவுள்ள முழுத்தத்துவத்துடனும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**14.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்தபின்னர் எத்தன்மையானதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால் அது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்தகுறிக்கோள்களைக் கொண்டதும் அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது இலாபத்தைப் பகிர்ந்தளித்தலை அதன் அல்லது அவற்றின் விதிகளின்மூலம் தடைசெய்கின்றதும் அல்லது தடைசெய்வனவுமான கழகத்திற்கு அல்லது கழகங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது மாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய கழகம் அல்லது கழகங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படும்போது அல்லது அதற்கு உடன் முன்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*கலைக்கப் படுவதன்மீது எஞ்சியுள்ள ஆதனம்.*

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**15**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**16**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில் சிங்கள, உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387 :* (வெளிநாடு) ரூபா *1,849 :* ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் *15* ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு *05* என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்